# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 19/2023 நாள்.20.7.2026

## PW1- திரு.ஜான்கென்னடி , த/பெ. திரு.ஜோதி

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கட்டுமான பொறியாளர் என்பதை காண்பித்து வருமானவரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். எந்த வருடத்திலிருந்து செலுத்துகிறேன் என்றால் JK Builders எங்களுடைய கூட்டாண்மை பங்குதாரர் நிறுவனம் மூலம் 2000 லிருந்து வருமானவரி செலுத்துகிறேன். வழக்கில் சொல்லபட்ட 20லட்சத்தை பிரதிவாதிக்கு JK Builders நிறுவன கணக்கிலிருந்து அனுப்பியதாக சொல்லியுள்ளேனே அதை காண்பிக்க கணக்குபட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வருமானவரி கணக்கில் அதை சொல்லியுள்ளேனா என்றால் பார்த்தால்தான் சொல்லமுடியும். காசோலை வாங்கிய தேதியோ, இடமோ வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 2020 முதல் 2022 வரை கொரானா காலம் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 கடன்பத்திரம் எழுதி வாங்கியபோது என்னுடன் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு பிரதிவாதியின் அம்மா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்தார்கள் என்றும், அதன் ஒளி நகலை பிரதிவாதி எனக்கு கொடுத்தார் என்றும் பிராதில் சொல்லிவிட்டு நான் சான்று நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்தது யார் என்றால் பிரதிவாதி கதிரவனே எழுதி கொடுத்தார். வழக்கு தாக்கல் செய்யும் வரை வட்டி கொடுக்காததால் கடிதமோ, வழக்கறிஞர் அறிவிப்போ கொடுக்கவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.2, 3 காசோலையை பிரதிவாதி என்னிடம் பூர்த்தி செய்யாத கையெழுத்திட்ட காசோலையாக கொடுத்தார் என்றும் அதை நான் பூர்த்தி செய்தேன் என்றும் சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு தேதியும் தொகையும், கையெழுத்து பிரதிவாதி பூர்த்திசெய்ததாகவும், வாதியின் பெயரை வாதியே பூர்த்தி செய்துகொண்டதாகவும் சொல்கிறார். நானும், பிரதிவாதியும் சேர்ந்து Time & Space என்ற நிறுவனத்தை தொடங்கி எனக்கு பிரச்சனைகள் இருந்ததால் நாங்கள் இருவரும் சேர்ந்து பிரதிவாதி பெயரால் நடத்தி வந்தோம் என்றால் இல்லை. Time & Space நிறுவனத்திற்கு பங்குதொகையாகதான் வழக்குதொகையை வழக்கில் சொல்லபட்ட தேதியல்லாத வேறு தேதிகளில் நான் கொடுத்தேன் என்றால் இல்லை. கடன்பத்திரத்தில் யாரும் சாட்சிகள் போடவில்லை என்றால் ஆமாம். வருமானவரி கணக்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால்

ஆமாம். வழக்கு தாக்கல் செய்தபிறகு பிரதிவாதி எனக்கு 1.50 லட்சம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு கொடுக்கவில்லை அது வேறுபணம். இந்த வழக்கு நான் தாக்கல் செய்தபிறகு பிரதிவாதி எனக்கு ஒரு தொகை கொடுத்தார் என்றும் அதை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் இல்லை. வழக்கு தொகை Time & Space நிறுவனத்திற்கு நான் பங்குபணமாக கொடுத்துவிட்டு ஈவுதொகைக்காக நான் காத்திருந்தேன் என்று சொன்னால் இல்லை. வழக்கில் சொன்னபடி பிரதிவாதிக்கு நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதனால் பிரதிவாதி தாவாவில் கண்டதொகையை எனக்கு செலுத்த கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் இல்லை. பிரதிவாதி என்னிடம் வேறு கடன் வாங்கியுள்ளார் என்றும் அதன் நிலுவை என்னிடம் உள்ளது என்று சொன்னார் இல்லை. பிரதிவாதி என்னிடம் வா.சா-ஆ.1, 2, 3 ஆவணங்களைபூர்த்தி செய்யாமல் கையெழுத்திட்டும் காசோலையை பூர்த்தி செய்யாமல் கையெழுத்திட்டு கொடுத்தது என்றும், அதைநான் பூர்த்தி செய்து நான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றும் சொன்னால் இல்லை. பிரதிவாதி எந்த காலத்திலும் வாதியாகிய எனக்கு தாவாவில் கண்ட சொத்தை ஆவணங்களை கடனுக்காக கொடுக்கவில்லை என்று சொன்னால் இல்லை. தாவா சொத்தானது பிரதிவாதிக்கு சொந்தமானதல்ல என்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே அது 3ஆம் நபருக்கு விற்கபட்டது என்றும் சொன்னால் இல்லை. வழக்கு ஆவணங்கள் பொய்யாக என்னால் தயார் செய்யபட்டு பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யபட்டது என்று சொன்னால் இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.07.20 17:06:22 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.